| | |
|---|---|
| 0'00 - 1'00 | ***பிறந்தது எங்க?***<br><br>அவிஸாவெல்ல<br><br>***அவிஸாவெல்ல?***<br><br>அவிஸாவெல்லைல தெரணியகல<br><br>***தெரணியாகல... சரி... ஏன்... எப்படி இங்க வந்த?***<br><br>இங்க வந்த என்றா... அம்மா அப்பாக்கள் சின்னக் காலத்துல மாதிரி... அந்தப் பக்கத்தில இருந்து இந்தப் பக்கத்துக்கு வந்திட்டாங்க. நான் அதுக்கு முதல்ல இருந்தது... அந்த நாட்களில இருந்தது... கொழும்பு பங்களா ஒன்றில...<br><br>***எங்க?***<br><br>தெஹிவள<br><br>***தெஹிவள...? சரி...***<br><br>அந்தப்பக்கத்துல இருந்தன். பதினாலு... பதினஞ்சு வயசு வரைக்கும் அங்கதான் இருந்தன் ஒம்பது வயசுல இருந்து... அதுக்குப் பின்ன நான் பெரிய புள்ளயான புறகுதான் என்ட அப்பா அங்க வந்து... அங்க என்னை அனுப்ப ஏலான்னு சொல்லிட்டாங்க... அதுக்குப்புறகு அப்பா கட்டாயப்படுத்தித்தான் என்னக் கூட்டிக்கொண்டு வந்தாங்க. அதுக்குப்புறகு வந்துதான் ஒவ்வொரு இடத்துல தோட்டங்களில இருந்தது.<br><br>***நீங்க எத்தன..... ஒம்பது வயசுல இருந்து.... எந்த... ஒம்பது வயசுல இருந்து.... எந்த...***<br><br>பதினஞ்சு வயசுவரை இருந்தன்.<br><br>***பதினஞ்சு வயசு வரை...? எந்தக் காலத்துல... எந்த வருசங்களில...?***<br><br>நான் புறந்தது எழுபத்தி அஞ்சில... எழுபத்தி அஞ்சு... மூணாம் மாசம் பதினஞ்சு.<br><br>***ஆ... ஹா...***<br><br>அதுக்குப் பின்னதான் நான் கொழும்புல... ஒம்பது வயசில மட்டுத்தான் என்னக் கொண்டுபோய் நிப்பாட்டினாங்க. |
| 1'00 - 2'00 | ***அம்மாவும் அப்பாவும்?***<br><br>ஓம். அதுக்குப்புறகு கட்டாயப்படுத்தி அப்பா வந்து திரும்ப கூட்டி வந்தாரு. கூட்டி வந்ததுக்குப் பின்ன... அதுக்குப்புறகு... இந்த... வீட்டில இருந்துகொண்டு தோட்ட வேலைகள செய்திட்டு இருந்தன். அதுக்குப்புறகு நான் கலியாணம் கட்டி இப்போ இருக்கன். |

| | |
|---|---|
| | ***கலியாணம் கட்டினது தோட்டத்திலயேதானா…?***<br><br>ஓம்.<br><br>***தோட்டத்துல உள்ள யாருசரியா… இல்ல…?***<br><br>ஓம்.<br><br>***அம்மா அப்பாக்களின்ற விருப்பத்தோடயா…?***<br><br>ஓம். அவங்கதான் கலியாணம் கட்டித்தந்தாங்க.<br><br>***இல்ல.. விரும்பியா…?***<br><br>இல்ல. அம்மா அப்பாக்களின்ற விருப்பத்தோடதான் கலியாணம் கட்டித் தந்தாங்க.<br><br>***கலியாணம் கட்டித்தந்தாங்க… சரி… உங்கட கணவர் இன்னும் இருக்காரா இங்க…? அவரும் தோட்டத்திலதானா வேலை செய்யிறது…?***<br><br>ஓம். தோட்டத்திலதான் வேல செய்யிற… கொழுந்து எடுத்திட்டுப் போனாரு இப்ப பெக்டரிக்கு.<br><br>***ஆ… கொழுந்து எடுத்திட்டுப் போனாரு… ஒம்பது வயசுல எங்க…. வீட்டு வேலைக்கா போனீங்க…?***<br><br>ஓம்.. பங்களால வேலைக்கு.<br><br>***சரி… அப்படியென்றா.. புள்ளைங்க இருக்காங்களா உங்களுக்கு…?***<br><br>மூணு புள்ளைங்க இருக்காங்க.<br><br>***அவங்களின்ற வயசுகள் என்ன?***<br><br>பெரிய புள்ள… மூத்த மகனுக்கு இருபத்தியொரு வயதாகுது. அவரு இப்ப இருக்காரு இந்த… வெலிகமைல. ஹார்ட்வெயார் ஒண்ணுல வேலை செய்றாரு. அடுத்தவருக்கு வயசு பதினாறு. அவரு என்னோட வீட்டில இருக்காரு. சின்னவருக்கு பதினொரு வயசு. வெள்ளிக்கிழம பதினாறாம் தேதிக்குத்தான் பதினொரு வயசு ஆகுது. |
| 2.00 - 3.00 | ***உண்மையாகவா…? இந்த… அப்படியென்றா… அவங்க ஸ்கூலுக்குப் போறாங்களா?***<br><br>**ஓம்.**<br><br>***எல்லாரும் ஸ்கூலுக்குப் போனாங்களா நன்றாக…?***<br><br>**ஓம்.**<br><br>***நாங்க அந்த ஒண்ணு ரெண்டு பேரோட கதைச்சம்…. சின்னப் புள்ளைங்க அவங்க ஸ்கூலுக்குப் போக மாட்டாங்க என்று… அது ஏன் தெரியல்ல…?*** |

| | |
|---|---|
| | எல்லாரும் ஸ்கூலுக்குப் போற புள்ளைங்கதான் இருக்காங்க. இந்த… ரெண்டொருத்தர் மாதிரிதான் தோட்டத்தில ஸ்கூலுக்குப் போறதில்ல. அடுத்த புள்ளைங்க எல்லாரும் ஸ்கூலுக்குப் போறாங்க. புள்ளைங்க இருபது பேர் மட்டிலயோ… எவ்வளவோ… போறாங்க ஸ்கூலுக்கு. சிங்களம்தான் படிக்கிறாங்க.<br><br>***ஏன்… தமிழ் ஸ்கூல்… தமிழ் வகுப்புக்கள் இல்லயா…?***<br><br>தமிழ் ஸ்கூல் இருக்கு. கொஞ்சம் தூரம். அந்தளவு படிப்பிக்க மாட்டாங்க.<br><br>***தூரத்துக்கு போகணும்…?***<br><br>ஓம்… அதனால நாங்க லேசு என்றபடியாலதான் சிங்கள ஸ்கூலுக்குப் போட்டிருக்கிற… இப்போ அவங்களுக்கு ஒரு தமிழ்ச் சொல்லும் விளங்குதில்ல. எல்லாம் சிங்களம்தான் ஏலும். புள்ளைங்களுக்கும்.<br><br>***அய்யோ… அப்படியா…? அது… அது சம்பந்தமா என்ன நெனைக்கிறீங்க?***<br><br>எங்களுக்கும் இனி கவலதான். என்ன செய்யிற…? தமிழ் ஸ்கூலுக்குப் போட்றதென்றா… தெனியாயைல போடணும். இல்லயென்றா… செல்வகந்த… அந்தப் பக்கத்துலதான் போட இருக்கு. அதனாலதான் எங்கட புள்ளைங்கள சிங்கள ஸ்கூலுக்குப் போட்டிருக்கோம். |
| 3'0 - 4'0 | ***இனி… இந்தப் பகுதில தமிழ் வகுப்புக்கள் அப்படி வெச்சா…?***<br><br>இல்ல.<br><br>***யாராவது வந்து வகுப்புக்கள் இப்படி வெச்சா…***<br><br>அப்படி செய்தா நாங்களும் விருப்பம்தான் புள்ளைங்கள அனுப்புறத்துக்கு.<br><br>***ஓம். தமிழ் எழுத்துக்களச் சரி படிக்கிறத்துக்கு அல்லவா….? இல்லயென்றா அநியாயம்தானே…?***<br><br>ஓம்… இப்போ என்ட ஒருத்தர்தான் ஸ்கூலுக்குப் போறத்துக்கு இருக்கிற. அவருக்கும் எப்படி சரி… இப்போ தமிழ் கொஞ்சம் படிப்பிக்கணும் என்று சொல்லி… இங்க யாருமில்ல தமிழ் படிப்பிக்க.<br><br>***அப்போ… இப்ப சாதாரணமா பேசுறது… எல்லாம் செய்றது… தமிழ்லயா..? சிங்களத்திலயா…?***<br><br>தமிழ்லயும் கதைக்கிற. நாங்க மிச்சம் சிங்களத்துலதான் கதச்சுக்கொள்ற. ஏனென்டா இனி புள்ளைங்க படிக்கிறது சிங்களத்துலயே… அதனால.<br><br>***சரி.***<br><br>வீட்டிலயும் இந்த… மிச்சம் நேரத்துக்கு தமிழ்ல கதைச்சாலும் அவங்களுக்கு விளங்குறதில்ல. நாங்க சிங்களத்துலதான் கதைக்கிற. தமிழில் கதைக்கிறில்ல மிச்சம்…<br><br>***அப்படியென்டா இல்லாமல் போகுமே மொழி…?*** |

| | |
|---|---|
| | மொழி… இனி அவங்களுக்கும் விளங்குது… நாங்க இனி…<br><br>***அவங்களுக்கு விளங்குது. அப்படியென்டா… இப்போ நீங்க கிறிஸ்தவமா..? இந்துவா…?***<br><br>நாங்க இந்து.<br><br>***அப்படியென்றா அந்த கோவில் அப்படி பக்கத்தில இருக்குதா…?***<br><br>ஓம்.<br><br>***இந்த பக்கத்துல…?*** |
| 4'0 - 5'0 | கோவிலொன்று இருக்கென்று சொல்றது இந்த… இங்க அடாரதெணியைல ஒண்ணு இருக்குது. பெரிய கோவில் என்றா தெனியாயைல இருக்கு. நாங்க அதுக்குப் போவோம்.<br><br>***அப்போ… அதுக்குப் போறத்துக்கு நேரமா இருக்கு?***<br><br>பூஜை அப்படி ஏதும் இருந்தா போறது. இல்லையென்றா… இங்க உள்ள கோவில்ல நாங்க பூஜை செய்வோம். எதாவது நேர்த்திக்கடன் வெச்சென்றா… இங்க கோவிலொன்று இருக்கு. அதுக்குப் போய் நாங்க பூஜை செய்திட்டு வருவோம்.<br><br>***சாதாரணமா… நாட்களில…. எப்படி…. எத்தன மணிக்கு எழும்புவீங்க…?***<br><br>விடியமே இனி நாலரை… நாலுக்குபோல எழும்புவோம். சில நாட்களில அஞ்சுக்கு எழும்புவோம். இப்போ ஸ்கூல் இல்ல என்றத்தால கொஞ்சம் லேட்டாகித்தான் எழும்புறது.<br><br>***இல்லையென்றா அவங்களுக்கு சமைச்சி கொடுத்து அனுப்பணுமா…?***<br><br>அவங்களுக்கு சாப்பாடு அனுப்பணும்…. இனி… அதாலதான்… வீட்டு வேலைகள செய்து கொள்ளணும்… காலைல எவ்வளவு நேரத்தோட எழும்பினாலும் நேரம் போதாது காலைல வேலைகள செய்துகொள்ள.<br><br>***இந்த… கையுதவிகள் ஏதும் இருக்கா உங்களுக்கு…?***<br><br>இல்ல.<br><br>***தனியாகத்தானா…?***<br><br>ஓம்.<br><br>***கணவர் உதவி செய்றாரா சமைக்கிறத்துக்கு…?***<br><br>அவரும் இனி… எதாவது… சமைக்கிற வேலைகள் எதாவது உதவியா செய்வாரு… ஆனாலும் அடுத்த எல்லா வேலைகளயும் நான்தான் செய்யணும். அவங்களுக்கு… மகன்களுக்கு… சாப்பிட்றத்துக்கு சமைச்சு… அவங்களுக்கு சாப்பாடு தயார்படுத்தணும்.. எனக்கும் சாப்பாடு கொஞ்சம் தயார்படுத்தி வைக்கணும்.. |

| | |
|---|---|
| | ***சாதாரணமாக... நீங்க... இந்த... தோட்டங்களுக்குப் போய் செய்யுற வேலை பற்றி கொஞ்சம் சொல்ல ஏலுமா...? என்ன செய்றீங்க...?***<br><br>கொழுந்துதான் இனி பறிக்கிற... |
| 5'0 - 6'0 | ***எத்தன மணிக்குப் போவீங்க... அப்படியான அந்த விபரத்த சொல்லுங்க.***<br><br>காலைல ஏழரைக்கு வரிசைல நிண்டு போனதுக்குப்புறகு... திரும்ப பன்னிரண்டுக்கு கொழுந்து நிறுத்துப் பாத்திட்டுத்தான் வீட்ட வாறது. திரும்ப ஒரு மணிக்குப் போன பின்னால இந்த நேரத்துக்குத்தான் திரும்ப வீட்ட வாறது...<br><br>***இனி... இந்த தோட்டத்தில எந்தளவு தூரம் போகும் வரைக்கும் கொழுந்து இருக்கு...?***<br><br>இந்த இடத்திலிருந்து கொஞ்சம்... அடாரதெணிய பெக்டரிக்குப் பக்கத்துல கொஞ்சம் இருக்கு கொழுந்து. அடுத்தது.... கிழமைக்கு ரெண்டு மூணு நாளைக்குத்தான் பறிக்கிற. அதுக்குப்புறகு இனி இங்கதான்... தோட்டத்துக்குள்ள.<br><br>***அப்படியென்டா கிழமைக்கு.... ஆ... அதுக்குப்புறகு தோட்டத்துக்குள்ள...? அப்படியென்டா... சனி... ஞாயிறு நாட்களில வேலை செய்றீங்களா..?***<br><br>வேலை இருந்தா செய்வோம். இல்லையென்றா துரைமார் இனி சில நாட்களில கொழுந்து இல்லையென்றா... நிப்பாட்டுவாங்கதானே...<br><br>***ஓம். அப்படியென்றா என்ன செய்வீங்க... கொழுந்து குறைவான நாட்களில அப்படி என்ன செய்வீங்க...? வேற வேலைகள் இருக்கா? வேற சுயதொழில் ஏதாவது செய்றீங்களா?***<br><br>இல்ல.<br><br>***இப்போ பெயருக்கு எத்தன கிலோ வேணும்?***<br><br>இருபத்தியஞ்சு வேணும்.<br><br>***இருபத்தியஞ்சு..?***<br><br>ஓம்.<br><br>***இப்போ கொழுந்து இல்லாத நேரத்துக்கு?***<br><br>இல்லாத காலத்திலயும் அந்தளவுதான் கேப்பாங்க.<br><br>***அப்படியென்றா எப்படி செய்வீங்க... இப்போ கொழுந்து இல்லாத காலத்துக்கு...?*** |
| 6'0 - 7'0 | ஆனாலும்.... இந்த... இருபத்தி நாலு... இருபத்தி மூணு அப்படி இருந்தா அரைவாசிதான் விழும்.<br><br>***கொழுந்து இல்லாத காலங்களிலயும்...?*** |

| | |
|---|---|
| | ஓம். இப்போ போன மாசமும் கொழுந்து இருபத்தி நாலுக்கோ என்னவோ… அரைவாசிதான் போட்டிருக்காங்க.<br><br>***இப்போ கொழுந்து உள்ள நாட்களில அவங்களுக்கு எப்படி…? இப்போ அதிகமா கொழுந்து பறிப்பீங்கதானே… அதுக்கு எப்படி கணக்கு தருவாங்க…?***<br><br>அதுக்கும் தருவாங்க.<br><br>***கணக்கு எவ்வளவு…?***<br><br>கணக்கென்றா போட்றயில்ல இனி… எல்லாத்தையும் ஒண்ணா கணக்குப்பாத்து இருக்கிறதால எங்களால பாத்துக்கொள்ள ஏலாது எவ்வளவு தாறாங்க என்று. ஆனா நான் கேக்கவும் சொன்னாங்க அந்த கூடுதல் கொழுந்துக்கு கொடுப்பனவு செய்யிற என்று.<br><br>***சாதாரணமா… மாதாந்த சம்பளம் அப்படி… எவ்வளவு… சொல்ல விருப்பம் என்றா சொல்லுங்க… இல்லையென்றா…***<br><br>சம்பளம் இனி வேலை செய்யிற மாதிரிக்குத்தான். அட்வான்ஸ் குறஞ்சளவுல எடுக்கிறன்றா… சம்பளம் எடுக்கலாம். அந்த லோன் அப்படி எடுத்திருந்தா… சம்பளம் கொஞ்சம் குறையூம்.<br><br>***நாள் சம்பளம் எவ்வளவு?***<br><br>அறுநூற்றி எண்பது ரூபா.<br><br>***உங்கள்களுக்கு இருபத்தி நாலு நாட்களும் வேலை கிடைக்குதா…?***<br><br>போன மாசம் இருபத்தி ஏழு கொடுத்திருந்தாங்க. இருபத்தி ஏலுல… நாங்க இனி மேலதிகமா இந்த… எங்கட புள்ளைங்களுக்கு சுகமில்ல என்றா… எங்களுக்கு சுகமில்ல என்றா… வீட்டுல இருப்பம்தானே… எப்படியாவது இருபத்தி அஞ்சு… இருபத்தி நாலாக ஆக்கிக்கொள்ளுவோம். |
| 7'00 - 8'00 | ***இருபத்தி நாலுக்கு கூடுதலா வேல செஞ்சாலும் உங்களுக்கு போனஸ் மாதிரி கூடுதலான கொடுப்பனவொண்ணு தாறாங்கதானே…. அந்த… இந்தத் தோட்டத்துல கொடுக்கிறாங்களா உங்களுக்கு…?***<br><br>போனஸ் தாறாங்க.<br><br>***அப்படியென்டா… பொதுவாக… அதாவது… இங்க தோட்ட வசதிகள் என்ன இருக்கு…?***<br><br>வசதிகள் இருக்கு… இனி… குறைபாடுகள்தான் கூடுதலா இருக்கு.<br><br>***குறைபாடுகள்…? என்ன வகையான குறைபாடுகள்…?***<br><br>என்ன இனி… எங்களுக்கு இந்த… ஒரு நேரத்தில தண்ணி இல்லாமப் போகுது குளிக்கிறத்துக்கு. கிணறொன்று இருக்கு. தோட்டத்தில இருக்கிற எல்லாரும் அதிலதான் குளிக்கணும். சேற்றுச்சகதியானா…. போகணும் அங்க அந்தப் பாலத்தடிய குளிக்கிறத்துக்கு. |

| | |
|---|---|
| | ***இங்க மேலுக்கு தண்ணி வாறில்ல...?***<br><br>இல்ல.<br><br>***குழாய் நீர் இல்ல?***<br><br>குழாய் இருக்கு. அந்த டெப் இருக்கிறது குடிக்க எடுக்குறத்துக்கு மட்டும்தான். குடிக்கிறத்துக்கு... சாமான்களக் கழுவிக்கொள்றத்துக்கு... வெயில் காலம் என்றதால காலைல நிப்பாட்டி.... திரும்ப பகல் பன்னிரண்டுக்கு தருவாங்க. ஒரு மணிக்கு மூடின பின்னால திரும்ப நாலு மணிக்கு திறப்பாங்க. திரும்ப அஞ்சரை... ஆறு மணியாகைல திரும்ப மூடுவாங்க. திரும்ப காலைலதான். |
| 8'00 - 9'00 | ***என்ன தண்ணியா?***<br><br>ஓம். இல்லயென்றா... இப்போ வெயில் காலம் என்றத்தால அங்க தண்ணியில்லாம....<br><br>***இல்லாமல் இருப்பதால... அந்த இல்லாமப் போற காலத்துக்குத்தானா மூடுறது...? இல்லாட்டி....***<br><br>ஓம்.<br><br>***தண்ணிப் பிரச்சினை... வேறென்ன...?***<br><br>வேறு இனி... குறைபாடுகள்... சொல்றத்துக்கு இல்ல இனி எங்களுக்கு.<br><br>***மலசலகூட வசதிகள் அப்படி...?***<br><br>இருக்கு.<br><br>***அதாவது வீடுகளுக்கென்டு இருக்கா... இல்ல....?***<br><br>வெளிய கட்டியிருக்காங்க.<br><br>***வெளியில கட்டியிருக்காங்க...?***<br><br>அதாவது... வெளியில கட்டியிருக்காங்க ஒரு வீட்டுக்கு ஒன்றுபடி....<br><br>***ஒன்றுபடி... சரி... சரி...***<br><br>ஒரு வீட்டுக்கு ஒரு டொய்லெட் என்றவாறு கட்டியிருக்காங்க.<br><br>***அவையெல்லாம்... தமக்கு வசதிப்பட்ட மாதிரி... உரியவங்களே துப்பரவு செய்துகொள்ளணும்...?***<br><br>ஓம். துப்பரவு செய்து வெச்சுக்கொள்ளணும்.<br><br>***அது உங்களுக்கு ஏதாவது நிறுவனம் ஒன்றால கட்டித் தந்தாங்களா...? அப்படி இல்லயென்டா...?*** |

| | |
|---|---|
| | நிறுவனத்தால… அதால கட்டித்தருவாங்க எங்களுக்கு… இப்போ… சொன்னப்பிறகு… எங்களுக்கு ஏதாவது வேணும் என்று… அப்போ… அவங்க செஞ்சு தருவாங்க. |
| 9'0 - 10'0 | ***அப்படியென்றா…. இப்போ பிள்ளைகளுக்கு சுகமில்லாமப் போனா அப்படி…. அவங்கள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறதுக்கான வசதிகள் இருக்கா…? அதாவது சுகாதார வசதிகள் என்ன இருக்கு…? வருவாங்களா யாராவது பார்க்கிறதுக்கு…?***<br><br>இல்ல. முந்தியென்றா இந்த இடத்துல ஹொஸ்பிட்டல் ஒண்ணு இருந்திச்சு. ஐயா ஒருத்தர் வருவாரு பின்னேரத்துல. எங்களுக்கு இந்தத் தோட்டத்துல துண்டு தருவாங்க போய் மருந்து எடுக்குறத்துக்கு. அத தோட்டத்துக்கு கொண்டுவந்து தந்தா… இங்கிருந்து கடிதமொன்று தருவாங்க. அத தோட்டத்துக்கு கொண்டுபோய்க் கொடுத்தா… தோட்டத்தால குறைச்சுக்கொள்வாங்க. இப்பயென்றா அந்த வசதிகள் இல்ல. இப்போ போகணும் விடியக்கயே ஆஸ்பத்திரிக்கு. மெடிக்கல் ஷொப் ஒன்று இருந்திச்சு. இப்போ அத மூடிட்டாங்க.<br><br>***மூடிட்டாங்க…?***<br><br>இப்போ எதாவது நோய்நொடி வந்தா தெனியாயக்கே போகணும். இல்லயென்றா… தெனியாய டவுனுக்கு போய் எடுக்கணும். இல்லயென்றா பெரியாஸ்பத்திரிக்குத்தான் போகணும். இரவு நேரத்துல நோய்வந்தா ஓட்டோ ஒன்டுதான் எடுத்திட்டு போய் நாங்க அட்மிட் பண்ணணும்.<br><br>***சாதாரணமா… நீங்கள் எவ்வளவு காலம்… ஒரு வருடமா இந்த தோட்டத்துல குடியேறி இருக்கிற…?***<br><br>முந்தியென்றா… வந்து எட்டு வருடங்கள் இருந்த. இருந்து நான் இந்த… எங்கட பெரிய மகனுக்கு சின்னொரு பிரச்சின வந்ததால போய் ஆறு மாசம் இருந்திட்டு திரும்ப இங்க வந்தன். இப்போ வாற மாதம் பதினாலாம் தேதி வந்தா… ஒரு வருடம் ஆகுது. முந்தி நான் எட்டு வருடம் இருந்தன் இங்க. |
| 10'0 - 11'0 | ***பெரிய மகனின்ற என்னசரி… என்ன பிரச்சின?***<br><br>தோட்டத்தில வேலை செஞ்சு… பெக்டரிக்கு போக சொல்ல… போகாம இருந்து… அந்த ஐயாட்ட சொன்ன தோட்டத்தில இருந்து போறென்று சொல்லி… ஐயா போகச் சொல்லல்ல… இவருக்கு போக வேணுமென்று… அதுக்குப்புறகு நான் போய் பக்கத்துலதான் இருந்தது. அப்புறம் எனக்கு அங்க இருக்க முடியாமப் போயிட்டுது. இருக்க ஏலாது இங்க மாதிரி… அங்க சரிவராதத்தால… நான் திரும்ப இங்க வந்த. அது இருக்கிற பிரச்சின என்னன்டா… போயா நாளுக்கும் எங்களுக்கு சுதந்திரமா வீட்டுல இருக்க ஏலா… போயாவுக்கும் பெக்டரிக்குப் போகணும். போயா நாளுக்கு பெக்டரி போகாட்டி… அதுக்கடுத்த நாள் வேலையும் இல்ல.<br><br>***போயா நாளுக்கும் போகணும்…?*** |

| | |
|---|---|
| | ஓம். ஞாயிறு… சனி, ஞாயிறு நாட்கள்ளயும் திடீரென்று கொழுந்து இல்ல என்றாத்தான் வேலைய நிப்பாட்டுவாங்க. கொழுந்து இருக்கிறன்டா வேலை இருக்கு. இல்லயென்றா அந்த… போயாக்குதான் எங்களுக்கு பிரச்சின கூடுதலா இருக்கு.<br><br>***இனி… அப்படியான விசயங்களப்பத்தி… அவங்க ஒன்று சேர்ந்து ஏதாவது நடவடிக்கை ஒன்ற எடுப்பாங்களா ஐயாகிட்ட சொல்லி…?*** |
| 11'0 - 12'0 | யாரும் ஆர்வம் காட்றாங்க இல்லையே… அதற்கு கதைக்கிறத்துக்கு. கதச்சாலும் பிரயோசனம் இல்ல மிஸ். இப்படித்தானே… எவ்வளவு சொன்னாலும் பிரயோசனம் இல்ல. அப்படி கதச்சத்துக்குப் பின்ன சொல்லுவாங்க விருப்பமென்டா இருங்க… இல்லயென்டா போங்க என்டு… அப்படித்தான் சொல்லுவாங்க. அதுதான். இப்போ எங்கட வீட்டில மூணு பேர் வேலை செய்றாங்க. சின்னவரு ஒராள்தான் இருக்கிற. வயசு.. பத்து… பதினொண்ணு ஆவுது. இப்போ மூணு பேரும் போய்… அஞ்சரையாகுது பெக்டரி ஓப் ஆகுறத்துக்கு. வீட்டுக்கு வரும்போது ஆறு மணி மட்டுல ஆகுது. நாங்க வந்து குளிக்கிறதா…? வீட்டு வேலைகளச் செய்யிறதா…? அதுக்குப்புறகு எத்தன மணிக்கு சமைச்சு… அவங்களுக்கு சாப்பிடக் கொடுக்குறது…?<br><br>***போயா நாட்களுக்கு ஒண்ணரை நாளுக்கான சம்பளம் தாறாங்களா?***<br><br>சம்பளம் ஒண்ணரை நாட்கள்டதான். அப்படியென்டாலும் சுதந்திரம் என்ற ஒன்றிருக்கே… போயா நாளுக்கும் லீவொன்று இல்ல என்றா… பிரயோசனம் இல்லயே… குறஞ்சது.. இப்போ புள்ளைங்க சிங்களம் படிக்கிறாங்க. அவங்கள பன்சலைக்காவது கூட்டிட்டுப்போக எங்களால ஏலாமல் இருக்கே… வெசாக் போயா நாளுக்காவது கூட்டிட்டுப் போக ஏலாம இருக்கு. அதுதான் எங்களுக்கு இங்க இருக்கிற பெரிய பிரச்சின…<br><br>***லீவொன்று இல்லாம இருக்குறது அல்லவா…?***<br><br>மேலதிகமா இனி எங்களுக்கு லீவு தருவாங்க… போயா நாளுக்கு மட்டும் வீட்டுல இருக்க ஏலாது.<br><br>***ஏனைய சனி… ஞாயிறு நாட்களில…?*** |
| 12'0 - 13'0 | அதென்டா லீவு தருவாங்க… சனிக்கிழம அப்படி வேலை…<br><br>***வேலை…?***<br><br>ஓம். ஞாயிறும்… சில நாட்களிலதான் ஞாயிறன்டும் வேலைய நிப்பாட்டுவாங்க. அதாவது… கொழுந்துப் பிரச்சினதான். கொழுந்து அப்படி இருக்கிறண்டா வேலை இருக்கு. கொழுந்து குறைவென்றா வேலைய நிப்பாட்டுவாங்க. இப்போ போன ஞாயிறு கொழுந்து இல்லையென்றத்தால மூணு நாட்கள் தொடர்ச்சியா.. களையெடுக்க போட்டாங்க. அதுக்குப்புறகு ஞாயிறு நிப்பாட்டினாங்க.<br><br>***அப்படியென்டா… அந்த துணிகள… அப்படி… கழுவுறத்துக்கு நேரம் எங்க இருக்கு…?*** |

| | |
|---|---|
| | எல்லாம் அந்த கிணத்துலதான் இனி…<br><br>***கிணத்துலதான் எல்லாமே…?***<br><br>ஓம்.<br><br>***எடுத்துக்கொண்டு போய் கழுவுவீங்க… எப்போ… அத செய்றது சனி… ஞாயிறா…?***<br><br>ஓம்.<br><br>***ஏனைய நாட்களில கஷ்டமா இருக்கும் அல்லவா…?***<br><br>ஓம். இப்போ ஞாயிறு மாதிரியான நாட்களில இந்த ஆக்களுக்கு லீவொன்று அப்படிக் கிடச்சா… உடுப்புக்கள அந்த நாள்லதான் நாங்க எல்லாரும் எடுத்துக்கொண்டு போய்… காலைல விடியமே ஆறு… ஏழு மணியாகக்க… எல்லாத்தையும் கழுவிக் காய்க்கணும். அதுக்கு முன்ன லீவொன்று இல்லத்தானே எங்களுக்கு. மாலைல இந்த நேரத்துக்கு வந்து கழுவுறத்துக்கு இனி… டைம் இல்லையே… இந்த நேரத்துல கழுவிக்கொள்ள ஏலும் நாம உடுத்திருக்குற உடுப்புக்கள மட்டும்தான். அவற்ற கழுவிப்போட்டு…. குளிச்சிட்டு வரத்தான் நேரமிருக்கு.<br><br>***சேமிப்பு அப்படி எவ்வாறிருக்கு…? பேங் புத்தகம் இருக்கா?*** |
| 13'0 - 14'0 | இப்போ புதிசாகத்தான்… முந்தியென்றா… பேங்கில போட்டுக்கொண்டு வந்த காசு… இந்த நேத்து… முந்தநாள்தான் இப்போ தோட்டத்தாலயே ஏற்பாடு பண்ணியிருக்காங்க. அடுத்த மாசத்தில இருந்துதான் தோட்டத்தால சம்பளத்திலிருந்து வெட்டுவாங்க.<br><br>***பேங் புத்தகத்தில போட்றத்துக்கு…?***<br><br>அவற்றை எல்லாம் சரிசெய்து கொடுத்த. அடுத்த மாசத்திலிருந்து… இந்த மாசம் முதலாம் தேதிதானே செய்துகொடுத்த…? இப்போ அடுத்த மாச சம்பளத்தில இருந்துதான் வெட்டுற என்று சொன்னாங்க.<br><br>***இனி… தோட்டங்களில சாதாரணமா… தோட்டங்களில சாதாரணமா… தனியாக போறத்துக்கு அப்படி பயமில்லையா இரவைல..?***<br><br>அப்படி இல்ல.<br><br>***எந்தப் பிரச்சினயும் இல்ல. பொம்புளப் புள்ளைக்கும் அப்படி தனியா போக ஏலும்…?***<br><br>ஓம்.<br><br>***வேற ஊராக்கள் வருவாங்களா தோட்டத்துக்கு…?***<br><br>இல்ல.<br><br>***வந்தா… யாராவது வந்தா… காண்பீங்க…?*** |

| | |
|---|---|
| | இந்தப் பக்கத்தில வந்து இப்படித்தான்... எங்கட ஊர் ஆக்கள்தான் இந்தப் பக்கத்துல... அதால இனி... எல்லாம் தெரிஞ்ச ஆக்கள்தான் இருக்காங்க. எங்களுக்கு எந்தப் பிரச்சினயும் இல்ல. எங்களுக்கு தொல்லைகள் ஒண்ணுமில்ல. யாரும் இன்றைக்கும் எங்களோட நல்லா இருக்கிறது... அவங்க எல்லாரும் ஒரு சகோதரங்கள் போலத்தான் எல்லாரும் இருக்கிறது.... |
| 14'0 -15'0 | ***அப்போ இந்த பிரச்சின இருந்த காலத்துல... யுத்த காலத்துல... அல்லது... எண்பத்தி மூனுல அப்படி நினைவிருக்கா என்ன மாதிரி என்று... அந்தநேரம் பிரச்சினைகள் இருந்ததா... மாத்தறை மாவட்டத்துல...?***<br><br>எப்படி என்று தெரியல்ல. அந்தளவு எனக்கு சொல்லத் தெரியல்ல.<br><br>***யுத்த காலத்துல...?***<br><br>இந்தப் பக்கத்துல இல்லத்தானே...<br><br>***பிரச்சின ஒன்றுமில்ல? அப்படியென்டா வேறெங்க சரி யுத்தமொன்று இருந்தாலும்... நீங்கள்கள் தமிழ் என்டாலும் உங்களுக்கு தொல்லைகள் இல்ல?***<br><br>ஓம்.<br><br>***இல்லயா...? உங்களுக்கு பயம் அப்படி தோணல்லயா?***<br><br>பயமென்றா இருந்திச்சிதான். ஆனா அப்படியிருந்தாலும் எந்தவொரு வித்தியாசமும் எங்களுக்கு ஏற்படல்ல. அந்த... ஒரு தடவ... அந்த... ஜேவீபி கலவர காலத்துலதான் எங்கட அம்மா அப்பாக்கள் பிறப்பத்தாட்சிப் பத்திரம் அது... இது... எல்லாத்தையும் எங்கயோ போட்டுட்டாங்க. எங்கயோ இரிக்கைக்க வெச்சிட்டு வந்திட்டாங்க. அதாலதான் எங்களுக்கு நெறைய குறைபாடுகள் இருந்திச்சி. பிறகு நான் அவற்ற திருப்ப செய்தெடுத்தன் புதிசாக.<br><br>***எந்தக் காலப்பகுதில...?***<br><br>எண்பதாம் ஆண்டு காலப்பகுதிகளில... ஜேவீபி காலத்துல...<br><br>***எண்பத்தி எட்டு... எண்பத்தி ஒம்பதுல...?***<br><br>அந்த மாதிரிதான்.<br><br>***அந்தக் காலப்பகுதில...?***<br><br>கலவரம் இருந்த...<br><br>**ஓம்.**<br><br>அந்தா... அப்போ அவங்க என்ன செஞ்சிருக்காங்க... பொருள் சாமான்கள் எல்லாத்தையும் வெச்சிப்போட்டு... புள்ளைங்களின்ற பிறப்பத்தாட்சிப் பத்திரம்... புள்ளைங்களின்ற என்றா... ரெண்டு மூணு பேராக்களின்ற போல வெச்சிட்டு வந்திட்டாங்க. அதுக்குப் பின்ன என்ட பிறப்பத்தாட்சிப் பத்திரம்தான் காணாமல் போயிருந்த. அதுக்குப்பின்ன... நான் போய் எடுத்திட்டு வந்துதான்... ஐடின்டி செய்றத்துக்கு எழுதி... எல்லாம் செய்திருக்கன். இன்னும் வரயில்ல ஐடின்டி. |

| | |
|---|---|
| | ***இனி அது கஷ்டமா செஞ்சுகொள்றத்துக்கு…? ஒரு நாளைல செஞ்சுகொள்ள ஏலுமா பிறப்பத்தாட்சிப் பத்திரம் செஞ்சுகொள்றத்துக்கு… அத… இத…?***<br><br>நான் இந்த… போர்ம் ஒன்ற நிரப்பிட்டு பிடபத்தறக்கு போனன். பிடபத்தற போய்த்தான்… அங்கதான் பிறப்பத்தாட்சிப் பத்திரத்த எடுத்தன். அந்த போர்ம பாத்திட்டு அவங்க அப்போ… பிறப்பத்தாட்சிப் பத்திரம் இருக்கு என்று எடுத்துத் தந்தாங்க. பிறகு… அதுவந்து… அதுக்குப்புறகுதான்… நான் ஐடின்டி செய்யக் கொடுத்து ரெண்டு மாசம் ஆகுது.<br><br>***இப்போ இனி… சாதாரணமா… நீங்க சொன்னீங்க கொஞ்சம் பயமொன்று அப்படி ஏற்பட்டது என்று… எந்த மாதிரியான பயம் ஏற்பட்டிச்சு…?***<br><br>பயம் என்று சொன்னா…. இந்த… எங்களுக்கும் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமோ என்று… எங்களுக்கு என்னசரி நடந்தாலும் பரவாயில்ல… எங்கட புள்ளைங்கள என்ன செய்றது என்றுதான்… அப்படித்தான் எங்களுக்கு மிச்சம் கவலையா இருந்திச்சி.<br><br>***ஆனா எந்தப் பிரச்சினயும் ஏற்படல்ல இல்லயா…?***<br><br>எந்தப் பிரச்சினயும் ஏற்படல்ல. எங்களுக்கும் இனி….<br><br>***அங்க… இங்க போனீங்களா யுத்த காலத்துல…?***<br><br>இல்ல… எங்கயும் போகல்ல.<br><br>***இங்கயேதான் இருந்தீங்க?***<br><br>ஓம். |
| 16'0- 17'0 | ***சரி… சரி… அப்படியென்டா நீங்க…. புள்ளைங்களில அப்படி… என்ன எதிர்பார்ப்ப வெச்சிருக்கீங்க…?***<br><br>புள்ளைங்க இனி… என்ன இனி… எதிர்பார்ப்பென்றா… அவங்க நல்லா இருக்கணும். அவங்க நல்லா படிச்சி…. நல்ல ஒரு நிலைக்கு வரணும் என்றதுதான் என்ட விருப்பம்.<br><br>***நல்லொரு நிலைக்கு வரணும் என்றது…. தோட்டத்துக்கு வெளியவா…. தோட்டத்திலயேதானா…?***<br><br>தோட்டத்துக்கு வெளியவும் சரி… தோட்டத்தில இருந்திட்டு சரி…. அவங்க நல்ல தொழிலொன்ட செய்திட்டு… அவங்க நல்லா இருக்கணும் என்றதுதான். மூத்த மகனயும்; அப்படித்தான் நான் நெனச்சிருந்த… அவரும் இப்ப வெளிநாட்டுக்குப் போகணும் என்ற எண்ணத்தோடதான் இருக்காரு. இப்போ இந்த வருடக் கடைசில போல போறத்துக்குத்தான் இருக்காரு.<br><br>***எங்க போறத்துக்கு எதிர்பார்க்காரு…?***<br><br>இன்னும் தீர்மானமான முடிவொன்னு இல்ல.<br><br>***என்ன செய்யிறத்துக்கு…?*** |

| | |
|---|---|
| | வெளிநாட்டுக்கு போகணும்… போகணும் என்று சொல்லிட்டு இருந்தாரு. அதுக்குப் பின்ன என்ன செய்வாரெண்டு தெரியல்ல. போன மாசம் வந்த நேரமும் சொன்னாரு போவென் என்று என்கிட்ட. நான் சொன்னன்… நல்லம் அப்படியென்டா என்று…. போய்… அவங்க நல்லா இருந்தா அதுதான் எனக்கு பெரிசென்டு…. ஏனென்டா நாங்க அல்ல… இனிவரும் காலங்களில அவங்கதான். வாழப்போறது அவங்கதானே…<br><br>***ஓம்… ஓம்….***<br><br>நான் சொன்னன் நீங்கள் நல்லா இருந்தாத்தான் தம்பிக்கும் நல்லம் என்று.<br><br>**ஓம்.** |
| 17'0 - 18'0 | இனி… இப்ப ஒருத்தருதான் இருக்காரு எனக்கு… இனி அவருக்கு வருத்தம் ஒண்ணு இருக்குறதுதான் பயம் எனக்கு.<br><br>***என்ன வருத்தம் என்றது….?***<br><br>வருத்தம் என்டு சொல்றது…. சின்ன வயசுலயே…. அஞ்சு வயசுல போல… வயித்துல ஒப்பரேசன் ஒண்ணு செஞ்சம். அதுக்குப் பின்ன இப்போ ஸ்கூல்ல புள்ளைங்களோட சண்டபிடிச்சிட்டு…. அதுக்குப் பின்ன கண்ணில கல்லொண்ணு பட்டு…. அதால கண்ணுல இதாயிட்டுது. அதுக்குப் பின்ன இப்போ கண்ணில ஒப்பரேசன் ஒண்ணு செஞ்சிருக்கு. எத்தனயோ மாசமா நான் கராப்பிட்டி ஹொஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போனன். கூட்டிப் போய்த்தான்… அதுக்குப் பின்ன ஒப்பரேசன் ஒண்ணு பண்ணித்தான் இப்போ கண்ண குணப்படுத்தி இருக்கிற. அதுதான்.<br><br>***இப்போ கண் குணமாயிட்டா…?***<br><br>ஓம்.<br><br>***அப்படியென்டா அவருக்கு அதால பிரச்சின இல்ல…? சாதாரணமா வாழ்க்கய கொண்டு போறத்துக்கு கண்ணில பிரச்சின இல்ல?***<br><br>ஓம். இப்போ வந்திட்டு… அவருக்கு எங்கள மாதிரி… மாச்சல்பட்டு வேலையொண்ணு செய்ய ஏலா. அவரிட பேர்லதான் நாங்க அதிகமா என்ன சரி சேமிச்சு வெக்கிறோம். காசும் எல்லா பேங்குகளிலயும் அப்படி… அவரிட பேர்லதான் அதிகமா காசு போட்டுட்டு இருக்கோம். என்ன இனி… இவருக்கு எதிர்காலங்களில மிச்சம் மாச்சல்பட்டு வேல செஞ்சுகொள்ளவும் ஏலாதே. இன்னும் ஒரு இருவத்தி ரெண்டு…. இருவது வருசம் ஆகக்கயும்… இப்போ இப்படி வேலை செஞ்சாலும்… இந்தா… இருபது… இருபத்தியொரு நாள்… அப்படித்தான்; வேல செய்வாரு. நான் இனி ஒண்ணும் சொல்றதில்ல. சத்தம் போடுவாரு. மிச்சம் பலவந்தப்படுத்தமாட்டன் அவர போகச் சொல்லி… அந்தா… இன்டக்கும் வீட்டிலதான். இன்டக்கு தெனியாய போயிட்டு இன்னும் வீட்ட வரல்ல. |
| 18'0 - 19'0 | ***இனி இந்த… தோட்டத்தில சாதாரணமா… எல்லாரும் ஒண்ணு சேர்ந்து…. ஒத்துமையா இருக்கீங்க…?*** |

| | |
|---|---|
| | ஓம்.<br><br>***பிரச்சின என்று எதுவும் இல்ல?***<br><br>**இல்ல.**<br><br>***ஒருத்தரிட்ட இருந்தும்…?***<br><br>இல்ல. வேலை செய்யிற இடத்துக்குப் போனாலும் எல்லாரும் ஒண்ணாகத்தான் வேலை செய்யிறது. வாறதும் எல்லாரும் ஒண்ணாகத்தான்.<br><br>***ஒரு கிராமம் மாதிரி?***<br><br>ஓம். தேத்தண்ணி குடிக்கப் போனெண்டாலும் எல்லாரும் ஒண்ணா இருந்துதான் தேத்தண்ணி குடிக்கிற. தனித்தனியா கொண்டுவந்து ஒவ்வொருத்தரா… வேற… வேற எடங்களில இருந்திட்டு குடிக்கிற இல்ல. எல்லாரும் ஒண்ணா பக்கத்து பக்கத்துல இருந்திட்டு… தேத்தண்ணி குடிக்கிற. அவங்க கொண்டு வாறத்த நான் சாப்பிட்றது. நான் கொண்டு போறத்த அவங்க சாப்பிடுவாங்க. அப்படித்தான் இருக்குறது. எந்த வித்தியாசமும் இல்லாம எல்லாரும் நல்லா இருக்கோம்.<br><br>***சரி. அப்படியென்டா…. இப்போ இங்க எல்லாரும் வேலை செய்யிறது தமிழ் ஆக்களா…? சிங்கள ஆக்களா…?***<br><br>நெறைய இருக்குறது தமிழ் ஆக்கள்தான்.<br><br>***கொஞ்சம் பேர் சிங்கள ஆக்களும் இருக்காங்க…?***<br><br>ஒருத்தருதான் இருக்கிற… வெளியால இருக்கிறது அவரு மட்டும்தான். அடுத்த எல்லாரும் இருக்கிறது தமிழ் ஆக்கள்தான். எங்கட ஆக்கள்தான். |
| 19'0 - 20'0 | ***அப்படியென்டா இப்போ… இந்தப் பக்கத்துல… அதாவது… உங்கட வாழ்க்கைக் காலத்துக்குள்ள என்டாலும்… நினைவுக்கெண்டு என்ன இருக்குது… என்ன சொல்றன்டா…. என்ன சரி நடந்திருக்கா… நிகழ்வு ஒண்ணு நடந்திருக்கா…? அப்படி இல்ல என்டா… நல்லது ஏதாவது நடந்திருக்கா…? இல்ல என்டா… அதாவது… வெள்ளமொண்டு சரி… அது மாதிரி… ஏதும் ஒண்ணு நடந்திருக்கா…? என்ன சொல்றண்டா… வாழ்ந்த காலத்துக்குள்ள நினைவுகளுக்குள்ள சேர்த்துக்கொள்றத்துக்கு ஏலுமான ஏதாவது ஒண்ணு…?***<br><br>வெள்ளம் ஒண்ணு வந்திச்சி… ரெண்டாயிரமாம் ஆண்டுகளில மாதிரி… வெள்ளம் ஒண்ணு வந்திச்சி. அதால நாங்க எல்லாரும் கொஞ்சம் இதாயிட்டம். எங்கட பொருள் சாமான்கள் எல்லாம் போய்… நாங்க அதுக்குப் பின்னதான்… கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான்… இப்போ மீண்டு வந்திருக்கிற. புள்ளைங்களின்ற உடுப்புகள் கூட… எல்லாமே… எதுவுமே மிச்சமா இருக்கல்ல.<br><br>***எந்தக் காலப்பகுதில அது…?*** |
| | |

| | |
|---|---|
| 20'0 - 21'0 | 2003 லயோ......<br><br>***அது இந்தத் தோட்டத்திலயா...?***<br><br>இல்ல... இந்தத் தோட்டத்தில அல்ல. வேறொரு தோட்டத்தில<br><br>***அது எங்க...?***<br><br>இங்க ஆஸ்பத்திரிக்கு கொஞ்சம் இங்கால இருக்கிற தோட்டம் ஒன்றில அது... பெக்ட்ரி ஒண்ணு கட்டப்பட்டிருக்கிற.... அது உடச்சிக்கொண்டு போய்..<br><br>***ஆ...***<br><br>ஆஸ்பத்திரிக்கு கொஞ்சம்... அந்திரிபான சந்தி என்று சொல்ற... அங்க... அந்த இடத்திலதான். அந்த இடத்திலதான் நாங்க கொஞ்சம்....<br><br>***அப்படியென்டா... அந்தக் காலத்தில... அங்கதான் குடியேறி இருந்தீங்க...?***<br><br>ஓம்.<br><br>***எவ்வளவு காலம் இருந்தீங்க...?***<br><br>அங்க அஞ்சு வருடம் இருந்த. அதுக்குப் பின்ன அந்த தோட்டத்தில இருந்து... எங்களுக்கு எந்தவொரு நிவாரணமும் கிடைக்கல்ல. அதுக்குப் பின்னால நாங்க வந்த. வந்துதான்... அதுக்குப் பின்ன... இப்போ... இந்தப் பக்கத்துக்கு வந்து.... இருந்து... நாங்க திரும்ப வாழ்க்கைய இது செஞ்சுகொண்ட எப்பிடி சரி...<br><br>***இப்போ சில நேரங்களில... பிரச்சினகள் இருக்கு என்று கதச்சீங்க என்டா... வேணும் என்டா இருங்க... இல்ல என்றா போங்க என்று சொல்ற என்டு சொன்னீங்கதானே... எப்ப சரி நினைக்கல்லயா... போய் வேறொரு இடத்துல குடியேறணும்... வாழ்க்கைய ஆரம்பிக்கணும் வேறொரு வகைல என்று சொல்லி...?***<br><br>இல்ல. |
| 21'0 - 22'0 | ***இந்த தோட்டமும் பிரைவட் ஒராளுக்கு சொந்தமானதா?***<br><br>ஓம்.<br><br>***யாருக்கு சொந்தம்?***<br><br>“சுது மஹத்தயா”க்கு<br><br>***அவருக்கு இந்தத் தோட்டம் மட்டுமா சொந்தம்?***<br><br>இல்ல. அவருக்கு இருக்கு. நெறைய தோட்டங்கள் இருக்கு. ரத்தினபுரில பட்டுவங்கல... அந்த பெக்ட்ரி... நெலுவ வீதியில இருக்கிற... அதுதான்.<br><br>***“சுது மஹத்தயா” என்றா வெள்ள நிற ஒராளா...? வெள்ளக்கார ஒருத்தரா?***<br><br>இல்ல... அவருக்கு சொல்றது அப்படி... அந்தப் பேருதான். வேறொரு பேர் இருக்குது. எல்லாரும் இப்படித்தான் சொல்றது. |

| | |
|---|---|
| | ***சரி… சரி… சொல்றீங்க “சுது மஹத்தயா” என்டு. ஏன் “சுது மஹத்தயா” என்டு சொல்ற… வெள்ளையா அவரு…?***<br><br>இல்ல. அவருக்கு சின்ன வயசில இருந்தே “சுது மஹத்தயா”… “சுது மஹத்தயா” என்டு வீட்டு ஆக்கள் சொல்லி இருக்காங்க. இப்போ தோட்டத்திலயும் அப்படி யார் யாரும் சொன்னதுதான்… அதுதான் இப்போ அவரின்ற பெயராக நாங்க சொல்றது. என்ன சொல்றன்டா… அந்தப் பெயர சொன்னா எல்லாருக்கும் தெரியும். இலங்கைல மட்டும் அல்ல… வெளிநாடுகள்லயும் கூட தெரியும். அது தெரியும் எல்லாருக்கும். இப்போ யாரு கேட்ட என்டாலும் “சுது மஹத்தயா” என்று சொன்னாப் புறகு எல்லாருக்கும் தெரியும்.<br><br>***இனி அப்படி என்டா… அவரு உங்கட பிரச்சினைகள் இருக்கிறத்த… அதப் பத்தி… தேடிப் பாக்குற இல்லயா… அவங்க…?*** |
| 22'0- 23'0 | தேடிப்பாக்குற என்றது… இப்போ அந்த ஆக்கள் வாறாங்க இல்ல. என்ன சொல்றன்டா… ஆறு மாசத்துக்கு ஒருக்கா மாதிரி மட்டும்தான் அவரு… பெரியவரு வாறாரு. இங்க பெக்ட்ரி இருக்கிறது… தம்பிதான் வேலைகளப் பாக்குறது. இங்க பெக்ட்ரில இருக்கிறது தம்பி. அண்ணாதான்… அண்ணாவின்டதான் தோட்டம். தம்பிதான் நிருவாகத்த கொண்டு போறது.<br><br>***இனி… அவங்களிட்ட சொல்ல ஏலாதா… இப்போ நீங்க சொன்ன கஷ்டங்கள…?***<br><br>சொன்னாலும் இனி… அவங்க கேக்க மாட்டாங்கதானே… அதுதானே நடந்திட்டு இருக்கு.<br><br>***அப்படியென்டா… இந்த… உங்கட இந்த வீடு உங்களுக்கென்டு சொல்லியே….***<br><br>இல்ல.<br><br>***சொந்தம் இல்ல?***<br><br>இல்ல. அவங்க போகச்சொல்ற நேரத்துக்கு நாங்க போகணும். பொருள் சாமான்களயும் எடுத்துக்கொண்டு.<br><br>***அப்படி என்டா… நீங்க இந்தத் தோட்டத்துல வேலை செய்யும் வரைக்கும் இந்த வீட்ட தாறாங்க…?***<br><br>ஓம். இருக்கிறத்துக்கு. எங்கள இப்போ இங்க இருந்து போகச் சொன்னா நாங்க… எங்கட பொருட்கள் எல்லாத்தயும் எடுத்துக்கொண்டு போகத்தான் வேணும் வேறு எங்கயாவது.<br><br>***இது… இந்த வீடு கட்டி… இதுக்குப் பின்னாலயும் இந்த எல்லாம் கட்டி இருக்கிறது… நீங்கள் கட்டினீங்களா… அப்படி இல்ல…?***<br><br>இல்ல… இல்ல… இங்கிருந்து இந்த… அந்த கதவு இருக்கே… அந்த இடத்திலிருந்து இங்கிட்டு வரைதான் அவங்க கட்டி இருந்தாங்க. நாங்க வேறயா களிமண்ணால கட்டிக்கொண்டோம் குசினிய… அறைக்குள்ள இடம் போதா என்டத்தால. அது நாங்க எங்கட முயற்சியால கட்டிக்கொண்டது. |

| | |
|---|---|
| | ***நீங்க அந்த பங்களால இருந்த காலம் எப்படியானது…?***<br><br>பங்களால இருந்த காலம் என்டா… இனி எனக்கு அவ்வளவு தெரியல்ல… நான் அந்தளவு… என்ன பாத்துக்கொண்டு இருந்தாங்க. அங்க நான் நல்லா இருந்தன். அதுக்குப் பின்ன… பெற்றோரிட தொல்லையாலதான் நான் வந்தது. இல்லயென்றா… இன்டைக்கும் நான் அங்கதான்.<br><br>***நீங்க அங்க இருக்க விரும்பினீங்களா அந்தக் காலத்தில…?***<br><br>ஓம்.<br><br>***சின்ன வயசுல…?***<br><br>அவங்க அம்மா அப்பா மாதிரிதான்… அம்மா அப்பா சின்னக் காலத்திலயே கூட்டிட்டுப் போய்… அங்க தங்க வெச்சத்துக்குப் பின்ன… அவங்கதான் அம்மா அப்பா மாதிரி என்ன நல்லா பாத்துக்கொண்டாங்க. எனக்கு எந்தவொரு வேறுபாடும் காட்டல்ல. அதனால நான் இனி… திரும்பவும் இங்க வர வேணும் என்டு விரும்பல்ல. அவங்களும் சொன்ன இனி… நாங்க இருக்கும் வரை… அவங்க இருக்கும் வரை பாத்துக்கொள்றன் என்டு. அதுக்குப் பின்ன எனக்கெண்டே வீடொன்று கட்டித் தந்து… எல்லாம் இது செய்யிறன் என்று. அப்பாவின்ற தொந்தரவாலதான் நான் வந்தது. பொலிஸுக்குப் போவன்… அது… இது என்று சொன்னத்தால.<br><br>***மிக்க நன்றி கதச்சதுக்கு…. நாங்க போயிட்டு வாறம்.***<br><br>நல்லம்<br><br>***மிக்க நன்றி.*** |